**கடுகன்னாவ நகர சபை**
**கண்டி மாவட்டம்**

-------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 30 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 25 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 10 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கடுகன்னாவ நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த 07 அலுவலக உபகரண விடயங்களின் பெறுமதியான ரூபா 114,913 இனை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு காணப்பட்ட நிலுவை வர்த்தக அனுமதிப்பத்திர மீதி ரூபா 18,500 இனை அக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டு நிலுவை நீதி மன்றத் தண்டப் பணம் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டுள்ளமையால் நிலுவை நீதி மன்றத் தண்டப் பணம்அதே தொகையால் மிகையாகக் காட்டப்பட்டிருந்த போதிலும் நிலுவை வர்த்தக அனுமதிப்பத்திரக் கணக்கில் நிலுவை ஒன்று காட்டப்பட்டிருக்கவில்லை.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

02 கணக்கு விடயங்கள் தொடர்பாக கணக்குகளின் பிரகாரம், மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 761,933 ஆகக் காணப்பட்டதுடன், பட்டோலைகளின் பிரகாரம், அக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 721,958 ஆகக் காணப்பட்டமையால், ரூபா 39,975 இற்கான இணக்கமின்மை ஒன்று அவதானிக்கப்பட்டது.

1.3.3 பெற வேண்டிய கணக்குகள்

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 2,432,489 ஆக காணப்பட்டதுடன் அவற்றில் ஒரு வருட காலத்தை விஞ்சிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 480,950 ஆகக் காணப்பட்டது.

1.3.4 செலுத்த வேண்டிய கணக்குகள்

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 17,309,065 இற்கான செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 17,279,545 தொகை செலவுக் கடன்கொடுத்தோர் ஆக காணப்பட்டதுடன் அவற்றில், 01 வருட காலத்தை மிகைத்துள்ள கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,298,801 ஆகும்.

1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

03 கணக்கு விடயங்கள் தொடர்பாக தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால், கூட்டுத்தொகை ரூபா 335,365 இற்கான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திரமாக பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது.

1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கு இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) இலங்கை குடியரசின் மத்திய மாகாண நிதி விதிக் கோவை | |
| பந்தி 261.2.2 | மீளாய்வாண்டின் போது 04 சந்தர்ப்பங்களில் வழங்கியிருந்த கூட்டுப் பெறுமதி ரூபா 49,607 இற்கான முற்பணங்கள் 2015 ஜூன் 25 திகதி வரை தீர்த்திருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | |
| i. நி.பி. 571(2) | ரூபா 197,641 பெறுமதியான காலங் கடந்த வைப்புக்கள் 59 சந்தர்ப்பங்கள் தொடர்பாக நிதிப் பிரமாண ஏற்பாடுகள் கடைபிடிக்கப்பட்டிருக்கவில்லை. |
| ii. நி.பி. 396 | கொடுப்பனவுக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த ரூபா 106,024 தொகை பெறுமதியான 11 காசோலைகள் தொடர்பாக குறித்த பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (இ) 2003 ஏப்ரல் 11 திகதிய சீபீசீ/சீ/எஸ்/06/06/02 கொண்ட மத்திய மாகாண பிரதான செயலாளரின் சுற்று நிருபம் | சபையில் கடமையாற்றும் 10 அலுவலர்களிடம் ஊழியர் பிணை ரூபா 42,500 இனை பெறுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஈ) 2002 நவம்பர் 28 திகதிய இலக்கம் ஐஏஐ/2002/02 கொண்ட திறைசேரிச் சுற்று நிருபம் | கணனிகள் தொடர்பாக தனிப்பட்ட பதிவேடு ஒன்று பேணுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,979,594 ஆகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 9,789,243 ஆகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 4,809,649 இற்கான குறைவு ஒன்று காணப்பட்டது.

2.2 வருமான நிருவாகம்

2.2.1 வீத வரி

(அ) மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு தயாரிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், நிலுவை வீத வரி மீதி ரூபா 6,203,984 ஆக காணப்பட்ட போதிலும், கணக்காய்விற்கு வழங்கியிருந்த தகவல்களின் பிரகாரம், நிலுவை வீத வரி மீதி ரூபா 6,209,715 ஆகக் காணப்பட்டமையால் ரூபா 5,731 இற்கான இணக்கமின்மையொன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டு ஆரம்பத்தில் ரூபா 5,191,876 இற்கான வீத வரி மீதியொன்று நிலுவையாகக் காணப்பட்டதுடன், ஆண்டிற்கான சிட்டை இடப்பட்டவைகள் ரூபா 8,193,126 ஆகும். ஆண்டின் போது அறவீடுகள் சதவீதம் நூற்றிற்கு 48 மற்றும் நூற்றிற்கு 57 மட்டத்தில் காணப்பட்டதினால் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 6,209,715 இற்கான அறவீடு செய்யப்பட வேண்டிய மீதியை அறவீடு செய்வதற்காக நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 170(2) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.2 வாடகை

(அ) கடுகன்னாவ வாராந்த சந்தையில் இருந்து 2008 ஆண்டு முதல் அறவிடப்பட வேண்டிய ரூபா 252,856 இற்கான நிலுவைத் தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 24 கடைகளில் இருந்து 1 மாதம் முதல் 07 வருடங்கள் வரை கால வீச்சில் காணப்பட்ட ரூபா 225,957 இற்கான வாடகை நிலுவையாகக் காணப்பட்டதுடன், அவை நிலுவை வாடகையை உடன்படிக்கையின் பிரகாரம் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.3 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா 169,658 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 1,253,550 கிடைக்க வேண்டியிருந்தது.

2.2.4 ஏனைய வருமானங்கள்

நகர சபை (அதிகாரம் 255) கட்டளைச் சட்டத்தின் பிரிவு 164(2) ஏற்பாடுகளின் பிரகாரம் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள 04 ஹோட்டல்கள்/ சிற்றுண்டிச் சாலைகளில் இருந்து நூற்றிற்கு 01 கட்டணம் 2014 ஆண்டு தொடர்பாக அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

2.2.5 அறிவித்தல் பலகைக் கட்டணம்

(i) 2014 திசெம்பர் 05 திகதிய இலக்கம் 1892 கொண்ட இலங்கை குடியரசின் வர்த்தமானி அறிவித்தலின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிரந்தர அறிவித்தல் பலகை ஒன்றிற்கு ஒரு சதுர அடி ரூபா 100 கட்டணம் அறவிடப்பட வேண்டும். எனினும் நகர சபை அதிகாரப் பிரதேசத்தில் பொருத்தப்பட்டிருந்த 56 அறிவித்தல் பலகைகளில் இருந்து கூட்டுத்தொகை ரூபா 876,300 தொகை ஒன்றினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. காட்சிப்படுத்தப்படும் பதாகை, சதுர அடி ஒன்றிற்கு ரூபா 50 இற்கான கட்டணம் அறவிடப்பட வேண்டும். எனினும், நகர சபை அதிகாரப் பிரதேசத்தில் பொருத்தப்பட்டிருந்த 05 பதாகைகளில் இருந்து ரூபா 3,500 தொகையொன்று அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) அறிவித்தல் பலகை வருமானம் மற்றும் பலகைகளின் எண்ணிக்கைகளை 2013, 2014 மற்றும் 2015 ஆண்டுகளுடன் ஒப்பீடு செய்யும் போது 2015 ஆண்டின் போது பாரிய குறைவு ஒன்று அவதானிக்கப்பட்டது.

2.2.6 களியாட்ட வரி

----------------------------

சபையின் அதிகாரப் பிரதேசத்தில் நடாத்தப்படும் சீத்தா சினிமா கொட்டகையின் சினிமாக் காட்சிகளின் போது வழங்கப்பட்டுள்ள நுழைவுப் பத்திரங்கள், களியாட் வரி கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் சபையின் முத்திரை பதிவு செய்வதற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும், அவ்வாறு சமர்ப்பிக்கப்படாமல் நுழைவுப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளதென 2015 ஜுன் 23 திகதி மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. இது தொடர்பாக முறையான செயற்பாடுகள் கடைபிடிக்கப்பட்டிருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------------

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

----------------------------------------------------------

கடுகன்னாவ நகரத்தில் அமைந்துள்ள சபையின் கட்டுப்பாட்டின் கீழ் காணப்படும் பொது மலசலகூடத்தினைப் பயன்படுத்துவோரிடம் பணம் அறவீடு செய்வதற்காக தேகாரோக்கிய தொழிலாளர் ஒருவருக்கு சாட்டப்பட்டிருந்ததுடன் ரூபா 300, ரூபா 400, ரூபா 500 ஆகிய தொகைகளில் நாளாந்தப் பணம் சேகரிக்கப்பட்டு சபைக்கு செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் பணம் சேகரித்தல் மற்றும் அனுப்புதலில் முறையான நடைமுறை ஒன்று கடைபிடிக்கப்பட்டிருக்கவில்லை.

3.2 பயன்படுத்தப்படாத மற்றும் குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்

-------------------------------------------------------------------------------------------------

கடுகன்னாவ பொது விளையாட்டுத் திடலில் விளையாட்டரங்கின் பின் பகுதியில் ரூபா 992,447 இற்கான செலவு மேற்கொள்ளப்பட்டு புதிதாக நிர்மாணிக்கப்பட்டிருந்த மலசலகூட முறைமை மற்றும் குளியலறைகளின் நிர்மாண வேலை 2014 ஆண்டின் போது இடை நிறுத்தப்பட்டிருந்தமையால் அப் பகுதி அசுத்தமாகி காணப்பட்டிருந்ததுடன் அவ் இடங்களை மதுபானம் மற்றும் புகைத்தலுக்காக பயன்படுத்தப்பட்டும் மற்றும் பல்வேறு துஷ்பிரயோகங்களுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

3.3 ஒப்பந்த நிருவாகம்

--------------------------------

(அ) பிலிமத்தலாவ வாராந்த சந்தை வளவினை அபிவிருத்தி செய்தல் -- கட்டம் 2 செலவிடப்பட்ட தொகை ரூபா 592,615

----------------------------------------------------------------------------------------------------------------------------------------

இந்த நிர்மாண வேலை தொடர்பாக 2015 ஜுன் 23 திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

(i) வாராந்த சந்தை வளவு 1:2:4 (3/4)” சீமெந்து, மணல் மற்றும் கற்கள் கலவையில் கொங்கிரீட் போடப்பட வேண்டும். அந்த அளவுகளில் போடப்பட்டிருக்கவில்லை. அத்துடன் கைகளினால் உடைக்கக் கூடிய அளவில் மிகவும் பலவீனக் கலவை ஒன்று போடப்பட்டுள்ளது.

(ii) 100’x34’x4” மற்றும் 25’x8’x4” அளவுகளில் கொங்கிரீட் பண்ணுவதற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், நிர்மாணிக்கப்பட்டிருந்த பகுதியில் 05 இடங்களில் உடைத்துப் பரிசோதனை மேற்கொண்ட போது, 2/81’x8’x4” பகுதி தவிர ஏனைய பகுதிகளின் கனம் 1.4 மற்றும் 1.8 அங்குலங்களாகக் காணப்பட்டது. இதன் பிரகாரம், இவ்வாறு நிர்மாணிக்கப்பட்டிருந்த பகுதிகளில் கொங்கிரீட் கலவையும் பலவீனத்துடன் காணப்பட்டதுடன் நியமங்களுக்கு இணங்காத 7.48 கொங்கிரீட் கியூப்களுக்காக ரூபா 342,219 தொகை ஒன்று முறையற்ற விதமாக சான்றுபடுத்தப்பட்டு 2014 திசெம்பர் மாதத்தில் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) கடுகன்னாவ வாராந்த சந்தை அபிவிருத்தி செய்தல் - செலவிடப்பட்ட தொகை ரூபா 1,858,027

---

இந்த நிர்மாண வேலை தொடர்பாக 2015 ஜுன் 23 திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

(i) நிர்மாண வேலையின் விடய இலக்கம் 06 இன் கீழ் வாராந்த சந்தை வளவில் வடிகால்கள் நிர்மாணிக்கும் போது வடிகாலின் அடிப் பகுதியில் 1:2:4 (3/4)'' சீமெந்து, மணல் மற்றும் கற்கள் கலவையில் 4'' கனத்தில் கொங்கிரீட் பண்ணுவதற்காக மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் சில இடங்களை உடைத்து பரிசோதனை மேற்கொண்ட போது போடப்பட்டிருந்த கொங்கிரீட் கையினால் உடைக்கப்படக் கூடிய மட்டத்தில் பலவீனமான கலவையாகக் காணப்பட்டதுடன் அடித்தளத்தில் சில இடங்களில் கொங்கிரீட் போடப்பட்டிருக்கவில்லை. இவ் விடயங்களை சரியான முறையில் பரிசோதனை மேற்கொண்டு அளவைப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படாமையினால் (141'-8''x1'-8''x4'') 0.77 கியூப்களுக்காக ரூபா 33,732 தொகையொன்று மேற்கொள்ளப்படாத வேலைகளுக்காக கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது.

(ii) விடய இலக்கம் 06 இன் கீழ் வடிகால்கள் கொங்கிரீட் பண்ணுவதற்காக 141'-8'' நீளத்திற்காக மதிப்பீடு தயாரிக்கப்பட்டு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் பௌதீகப் பரிசோதனையின் போது 134' மாத்திரமே நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், 7 அடிகள் 08 அங்குலங்கள் அளவான மேற்கொள்ளப்படாத வேலைகளுக்காக ரூபா 4,380 தொகை மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(iii) விடய இலக்கம் 08 இன் கீழ் 1:2 ½ :5(1'') சீமெந்து, மணல் மற்றும் கற்கள் கலவையில் 4 அங்குல கனத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த கொங்கிரீட் பரப்பு 2015 ஜுன் 23 ஆந் திகதி பௌதீகப் பரிசோதனையின் போது சுமார் 05 இடங்களை உடைத்து பரிசோதனை மேற்கொண்ட போது போடப்பட்டிருந்த கொங்கிரீட் கையினால் உடைக்கக் கூடிய மட்டத்தில் மிகவும் பலவீனமான கலவை பயன்படுத்தப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அவற்றின் கனம் 02 அங்குலங்கள் அளவில் காணப்பட்டது. மதிப்பிடப்பட்ட நியமங்களுக்கு இணங்காமல் நிர்மாண வேலைகள் 5.39 கியூப்களுக்காக ரூபா 521,686 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது.

(இ) கடுகன்னாவ பொது விளையாட்டுத் திடலில் மலசல கூட முறையை நிர்மாணித்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் - செலவிடப்பட்ட தொகை ரூபா 992,447

---

நிர்மாணிக்கப்பட்டிருந்த மலசலகூட முறையில் கதவுகள் போடப்படாமையால், மலசல கூட முறைமை பாரிய அசுத்த நிலையில் காணப்பட்டதுடன் தரைக்குப் பதிக்கப்பட்டிருந்த தரை ஓடுகள் சேதமடைந்து உடைந்த நிலையில் காணப்பட்டது. அதே போல், மலசல கூட முறைமையின் பின் பகுதி சுவர்களில் இருந்து மலசலகூட உட்பகுதிக்குள் நீர் ஒழுகி இருந்தது. மலசலகூட முறைமைக்காக ரூபா 992,447 தொகையொன்று செலவிடப்பட்டு, இடைநிறுத்தப்பட்டு மீதி வேலைகள் பூர்த்தி செய்யப்படாமையால், அதனை பயன்படுத்த முடியாதவாறு அழிவு ஏற்பட்ட நிலையில் காணப்பட்டது என 2015 ஜுன் 23 திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(ஈ) நகர சபையினால் ஒப்பந்த வேலைகள் மேற்கொள்ளும் போது விஷேடமாக கொங்கிரீட் போடுதல் போன்ற நிர்மாண வேலை விடயங்களில் தொழிநுட்ப முறைமை கடைபிடிக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் சபையினால் அந்த தொழிநுட்ப முறைமையை அறிமுகம் செய்தல் அல்லது அது தொடர்பாக முறையான மேற்பார்வை ஒன்று நடைபெறவில்லை என அவதானிக்கப்பட்டது.

3.4 மனித வள முகாமைத்துவம்

2015 மே 31 திகதியில் உள்ளவாறு சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி, உள்ளவாறான பதவியணியுடன் ஒப்பீடு செய்யும் போது 10 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டது.

4. கணக்களிப் பொறுப்பும் நள்ளாளுமையும்

4.1 கூட்டிணைந்த திட்டம்

மீளாய்வாண்டின் போது சபையினால் கூட்டிணைந்த திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

4.2 பெறுகைகள்

சபையினால் மீளாய்வாண்டின் போது பெறுகைகள் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

4.3 தொழிற்பாட்டு திட்டம்

சபையினால் மீளாய்வாண்டின் போது தொழிற்பாட்டுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

4.4 அகக் கணக்காய்வு

மீளாய்வாண்டின் போது சபையின் போதியளவான அகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

4.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் மதிப்பீட்டு வருமானங்கள் மற்றும் செலவுகள், உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவுகளுடன் இணக்கஞ் செய்யும் போது 02 வருமான விடயங்களில் நூற்றிற்கு 53 முதல் நூற்றிற்கு 84 வரையும், 04 செலவு விடயங்களில் நூற்றிற்கு 16 முதல் நூற்றிற்கு 70 இனை மிகைத்தும் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு பயன்தரு கட்டுப்பாட்டு கருவி ஒன்றாகப் பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(உ) ஒப்பந்த நிருவாகம்